பக்கங்கள் - 4 விலை ரூபா 5-00

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

## மக்கட் பேறு

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற. 61

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 62

தம் பொருள் என்பதம் மக்கள் அவர் பொருள்
தம் தம் வினையான் வரும். 63

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 64

மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. 65

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம,
இல 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

தீபம் : 44 ஆகஸ்ட் - 1995 ஒளி : 17

★ 10 வாரங்களாக நிவாரணமின்றி —

# இடம்பெயர்ந்த மக்கள் பட்டினி ! குடாநாட்டில் உணவுப் பஞ்சம் !!

இராணுவ நடவடிக்கைகளினால் யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் சுமார் மூன்று இலட்சம் மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த இலவச உலர் உணவுப் பொருட்சள் கடந்த 10 வாரங்களாக வழங்கப்படாமையினால் முகாம்களில் உள்ள மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரின் உணவுக் களஞ்சியங்களில் கையிருப்பில் இருந்த உலர் உணவுப் பொருட்கள் முடிவடைந்ததை அடுத்தே இந்நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி மக்கள் மீதான பொருளாதார அழுத்தங்களைத் தீவிரப்படுத்தும் வகையில் அரசு கடந்த ஒரு மாதமாக எந்தவொரு உணவுக் கப்பல்களையும் அனுப்பி வைக்காமல் விட்டமையே இவ் உணவுத் தட்டுப்பாட்டுக்கும், இலவச உலா உணவுப் பொருள் விநியோகம் தடைப் பட்டதிற்கும் காரணமாகும்.

பல நோ. கூ. சங்கங்களும், தனியாா வர்த்தகர்களும், கப்பல் மூலமாகவும், தாண்டிக்குளம் ஊடாகவும் உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கு அரசு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருவதினால் பல நோ. கூ. சங்க களஞ்சியங்களும், தனியார் களஞ்சியங்களும் காலியாகவுள்ளன என்று கூட்டுறவுச் சங்க, தனியார் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் இத்தகைய கெடுபிடிகளினால் இடம் பெயர்ந்த மக்கள் உட்பட சுமார் பத்து லட்சம் மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடசியாக, வைகாசி மாதத்திற்கான கடசி இருவாரங்களுக்கும் ஆனி மாதமுதல் இரு வாரங்களுக்குமான உரிய நிவாரணப பொருட்களே இடம் பெயர்ந்தோருககு பல நோ. கூட்டு. சஙகஙகளினால வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்பான வாசகர்களே!

பத்திரிகை அச்சிடும்தாள் தட்டுப்பாட்டினாலும், விலை ஏற்றத்தினாலும் நான்கு பக்கங்களுடன் வெளிவருகிறது என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

## 'அ' 'உ' அட்டைக்கு சீனி

உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் பல நோ கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டு அடிப்படையில் பாவனையாளர்களுக்கு சீனி வழங்கிவருகிறது.

யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்ட இச்சீனியை 1 முதல் 2 அங்கத்தவர் உள்ள குடும்பத்திற்கு ஒரு கிலோவும் 3 முதல் 4 அங் உள்ள குடும்பத்திற்கு 2 கிலோவும், 5 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு 3 கிலோவும், 'அ' 'உ' பங்கீட்டு அட்டைக்கு கிலோ 33/- வுக்கு செயலக அறிவுறுத்தலின் பிரகாரம் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை இடம்பெயர்ந்தோரின் 'இ' பங்கீட்டு அட்டைக்கு இச்சீனி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உணவுப் பொருள் எடுத்துவர முயற்சி

யாழ். மாவட்டத்தில் உள்ள 23 பல நோ. கூ. சங்கங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை கொழும்பில் இருநது கப்பல மூலம் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விவசாய சமாசம் செய்து வருகிறது.

1000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை கப்பலில் எடுத்துவர ஏற்பாடு செய்யும் சமாசம், 250 மெற்றிக் தொன் உணவுப்பொருட்களை தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சங்கங்களுக்கும் எடுத்து வரவும் ஏற்பாடு செய்துள்ளது.

## கடல்வள பயிற்சி 25-ம் திகதி ஆரம்பம்

பல்வேறு துறை சார்ந்த பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்திவரும் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை கடல்வள பாடநெறியை இம்மாதம 25-ம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக மாவட்டச் செயலாளா திரு. சு. சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

மொத்தம 40 நாட்களைக் கொண்ட இப்பயிற்சி நெறி சனிக்கிழமைகளிலும், வடு முறை நாட்களிலும் நடாததபபடவுள்ளது. மாவட்ட கூட்டுறவுச் சபை, பல்கலைக் கழகம், கடற்றொழில் பயிற்சிக கல்லூரி, மாவட்ட கடற்றொழில விரிவாக்க நிலையம், கடலகப பொறியியலாளர், பொருண்மிய மேமபாட்டு நிறுவனம், சீநோர் நிறுவனங்களைச் சேர்ந்த துறைசார்ந்தவல்லுநர்களால் விரிவுரைகள் நடாததப்படவுள்ளது.

இபபயிற்சி, நெறிக்கு க. பொ. த. சாதாரண பிரிவைச் சேர்ந்த சுமார் 50 மாணவர்கள் சேர்ததுக கொள்ளபபடவுள்ளனா.

## துரித கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டது

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடாததப்படவுள்ள துரித கணக்காய்வுத் திட்டத்தின்கீழ் கூட்டுறவுப் பயிற்சிபெற்ற அனுபவமுளள சிரேஷ்ட சஙகப் பணியாளாகளை ஈடுபடுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறிய நிலைச் சஙகஙகளிலேயே இத்திட்டம நடைமுறைப்படுத்தபபட்டு வருகிறது.

இது தொடர்பாக தென்மராட்சி, கோப்பாய பிரதேச செயலர் பிரிவுகளில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பபட்டு சங்க நிர்வாகிகளுக்கு கணக்காய்வு செய்யும் உத்தியோகத்தாகள் அறிமுகப்படுத்தப்பட்டு, கணக்காய்வு வேலைகள் செய்வதற்கான அறிமுகக் கடிதம் கூ. அ. உ. ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

( 4-ம் பக்கம் பார்க்க )

## கிழக்கு கூட். சங்கங்களின் கணக்காய்வுக்கும் ஏற்பாடு

கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் கணக்காய்வு வேலைகளைத் துரிதப்படுத்தும் நடவடிக்கையில் வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளா திரு. சுநதரம டிவகலாலா ஈடுபட்டுள்ளார்.

துரித கணக்காய்வுத் திட்டத்தின் கீழ் அங்குள்ள பல நோ. கூ. சங்கங்கள் உள்ளிட்ட பாரிய கூட்டுறவு நிறுவனங்களினதும், சிறிய சங்கங்களினதும் கணக்காய்வு வேலைகளையும், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி சமபந்தமான விடயங்களைக் கவனிக்கும் பொருட்டு ஆணையாளர் அங்கு விஜயம் மேறகொள்ளவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தற்காலிக இடமாற்றம்

வன்னிப பிரதேசத்தில உள்ள கூட்டுறவு நிறுவனஙகளில் நீண்ட காலமாக மேற கொள்ளப்படாமல் இருநத நிலுவைக் கணக்காய்வுகளைச் செய்து முடிப்பதற்கு யாழ மாவட்டத்தில உளள சுமார 20-க்கு மேற்பட்ட கூட்டுறவுத் திணைக்கள கணககாய்வு உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக யாழ். மாவட்ட வேலைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வுத்தியோகத்தர்கள் வன்னிப பெரு நிலபபரப்பில இம மாதம் முதல ஒக்ரோபர் மாதம் வரை கடமையில் ஈடுபடுவார்கள்.

வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளா திரு. சுந்தரம் டிவகலாலாவின் விசேட பணிப்பின் கீழ் யாழ்ப்பாணம கூ. அ. உ. ஆணையாளா திரு. தி. சபாரத்தினம இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## கூட்டுறவு நவீன சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டும்

"கூட்டுறவு என்பது ஒரு வாழ்க்கைமுறை இவ்வாழ்க்கை முறையை நவீன சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில திறம்பட நடாத்துவதற்கு கூட்டுறவுக் கல்வி அவசியமாகும். எனவே கூட்டுறவுக் கல்வியின் மேம்பாட்டுக்கு அனைவரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டும் இதுவே கூட்டுறவின் அடிப்படைக் கொள்கையாகும்"

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக கல்லூரியின் சாதாரண பிரிவு பயிற்சிநெறியினை ஆரம்பித்துவைத்துப் பேசிய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவரும் கிளிநொச்சி மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளருமான திரு. தி. இராசநாயகம் தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்;

திரு. தி. இராசநாயகம் அங்கு தொடர்ந்து பேசுகையில; முல்லைத்தீவு, மன்னாா ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுக்கல்லூரிகள் இயங்கமுடியாத சூழ்நிலைகள் இருந்த போதும், பல நெருக்கடிகளின் மத்தியிலும் எமது சபையினால் இக்கல்லூரியை சிறப்பாக இயங்கவைக்க முடிவதை

( 4-ம் பக்கம் பார்க்க )

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

கடந்த யூலை மாதம் 9-ம் திகதியும் அதற்குப பின்பும யாழ். குடா நாட்டில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கடமையில் ஈடுபட்டிருந்த தெல்லிப்பழை பல நோ. கூ. சங்க ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு நிதயாக சங்கம் ரூபா 22414/- வை 55 ஊழியர்களுக்கு பகிர்ந்து வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிந்தனைச் சுடர்

எந்தக் காரியத்தையும். தன் விருப்பம்போல் செய்ய உரிமை கிடையாது. அந்த விருப்பம் நல்ல காரியம்செய்வதற்கா? அப்போது மட்டுமே அந்த உரிமையுண்டு.

— ஸி. ஸிம்மன்ஸ்

## ஐக்கிய எண்ணம்

# உணவு உற்பத்திக்கும் தடையா ?

சமாதானத் தீர்வு; இராணுவத் தீர்வு; பொருளாதார அழுத்தமூலமான தீர்வு; அரசின் இம்மூன்று அணுகுமுறைகள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியும் என்று சிறிலங்காவின் பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த அண்மையில் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தமையானது அவர் கனவுலகில் சஞ்சரிக்கிறார் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

யுத்தப் பிரியர்களை தனது நெருங்கிய சகாக்களாக வைத்திருக்கும் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவோ தமிழீழப் பிரதேசங்களில் தினமும் இடம்பெற்றுவரும் தமிழ் இனப்படுகொலைகள், எறிகணை வீச்சுக்கள், விமானக்குண்டு வீச்சுக்கள், பொருளாதாரத்தடைகள்பற்றி தனக்கொன்றும் தெரியாது... தெரியாது... தெரியாது... என்று அவலக்குரல் எழுப்புகிறார்.

இது ஒருபுறமிருக்க; நாடு பொருளாதார சுபீட்சமடைய வேண்டுமானால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விவசாயப் பெருமக்களுக்கு அரசு பலசலுகைகளை அழித்துவருகிறது என்று பிரசாரம் செய்துவரும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசானது, தெற்கில் உணவு உற்பத்தியை ஊக்குவித்து பல சலுகைகளை வழங்கிவரும் அதேவேளை, வடக்கில் உணவு உற்பத்திக்கு தடைவிதித்திருப்பதானது அரசின் கபடத்தன்மையை புலப்படுத்துவதாக உள்ளது.

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையினால் யாழ். குடாநாட்டில் சுமார் 200 ஹெக்டா விளைநிலம் பயிர்களுடன் இராணுவத்தினால் நாசம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அசேதனப் பசளை இன்றி, சேதனப் பசளைமூலம் விவசாயத்தையும், மண்ணையும் வழப்படுத்தியவர்கள் யாழ் குடாநாட்டு விவசாயிகள் என்பது சிங்கள அரசுத் தலைவர்களுக்குத் தெரியாத விடயமல்ல. வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து லொறிக்கணக்காக சேதனப் பசளையைக் கொண்டு வந்து விவசாயம் செய்தவர்கள் தான் எம் விவசாயிகள். ஆனால் இன்று பிரதான பாதைகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதினால் நிலமை மாறாகி விட்டது.

யாழ். மாவட்ட விவசாய மக்களுக்கு கொழும்பில் இருந்து விவசாய உள்ளீடுகள் பல சிரமங்களின் மத்தியில் வரமுற்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை விவசாயிகள் பல விதமான கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

கூட்டுறவு அடிப்படையில் விவசாய கூட்டுறவுச் சங்கங்கள், சமாசம் அமைத்து சிறந்த விவசாயிகளாக வடபகுதி விவசாயிகள் சிறிலங்கா தலைவர்களினால் மதிக்கப்பட்ட காலமும் ஒன்று இருந்தது என்பதை அவர்களின் தற்போதைய வாரிசுத் தலைவர்கள் அறியாதிருப்பதே இன்று எமமக்கள் மீது அவர்கள் சுமத்தும் பொருளாதார அழுத்தங்களாகும்.

இத்தகைய அழுத்தங்கள் நாட்டின் உற்பத்தியை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பதை அரசு உணராமல் இல்லை. இருந்தும், மாறி மாறி வரும் சிறிலங்காவின் பேரினவாத அரசுகளும், அதன் தலைவர்களும் கடைப்பிடித்துவரும் கொள்கைகள் நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதையே விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் சொந்த வீடுவாசல்களையும், உடமைகளையும், வருமானத்தை ஈட்டித்தரும் தொழில்கள், விவசாயம் என்பவற்றை இழந்து அல்லலுறும் மக்கள் மீது சுமத்தப்பட்டு, திணிக்கப்படும் கோரயுத்தத்தை நிறுத்தக்கோரியும், உரத்தடை, பொருளாதாரத்தடை, ஆகியவற்றை நீக்கக்கோரியும், கடந்த 9-ம் திகதி புதனகிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம ஒழுங்குசெய்து யாழ். குடாநாட்டு மக்களின் அரசு மீதான வெறுப்புணர்வையும் மனக்குமுறல்களையும் எடுத்துக்காட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே அரசு விதிக்கும் அனைத்துத்தடைகளும் எம்மக்களின் போராட்ட உணர்வுக்கு உரமிடுவதாகவே அமைகிறது. குடாநாட்டு விவசாயிகளைப் பொறுத்த மட்டில் கூட்டுறவுச் சங்கம் நிறுவி விவசாயத்தை வளம்படுத்தி வெற்றி கண்டவர்கள். கூட்டுறவாளர்களும், விவசாயிகளும் எம் மண்ணில் உள்ள, எம் வீடுகளில் உள்ள சேதனப் பசளைகளை சேமித்து பாதுகாத்து உரமிட்டு மண்ணை வளமாக்கி விவசாயத்தில் ஈடுபட முன்வர வேண்டும்.

“ கூட்டுறவென்பது நாட்டினிற்குயிராம் ”

## பால் உற்பத்தியாளர்களுக்கு

# கடன்வழங்க ரூ. 2கோடி பெற்றுத்தரவும்

“பால் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியையும், அதற்காக 2 கோடி ரூபாவினை வட்டியில்லாக் கடனாகவோ, அல்லது குறைந்த வட்டி வீதக் கடனாகவோ பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்து தரவும்”

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினா கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் கோரியிருப்பதாவது;

பால் பதனிடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரையும், ஓர் கால்நடை வைத்தியரை முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ அமர்த்துவதற்கும், பால் உற்பத்தி அதிகரித்து வருவதினால் பாலைப் பதனிட்டு பாதுகாக்க பால் குளிரூட்டி வசதிகளும், பால் கொண்டு செல்லக்கூடிய குளிரூட்டப்பட்ட பவுசர் வசதிகளும், பால்சாலை உபகரணங்களுட் பெற்றுத்தருமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சங்கத்துற்கு விஜயம் செய்து சங்கத்தின் தேவைகளையும், குறைகளையும் கேட்டறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொள்வனவு விற்பனவு நிலையங்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்களதும், பாவனையாளர்களதும் நன்மை கருதி யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பத்து இடங்களில் பால் கொள்வனவு, விற்பனவு நிலையங்களை திறந்துள்ளது.

திருநெல்வேலி, இணுவில், பெருமாள்கோவிலடி, நல்லூர், அரியாலை, உருமபிராய் சுன்னாகம், பிரதானவீதி யாழ்ப்பாணம (பிரதான தபாலகம் முன்பாக) கல்வியங்காடு, பருத்தித்துறை வீதி (வானவில் அருகாமை) ஆகிய இடங்களிலேயே பால் மேற்படி விற்பனவு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் இவ்வாண்டுக்கான 2-வது கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவு பயிற்சி நெறி இம்மாதம் 28-ம் திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகுமென கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் கூறினார்.

# லொறிமூலம் உணவு எடுத்துவரத் தடை

யாழ். குடா நாட்டுக்கு கொழும்பில் இருந்து லொறிகள் மூலம் உணவுப் பொருட்கள் எடுத்து வருவதற்கு கடந்த பல மாதங்களாக அரசு தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடா நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கப்பல்மூலம் எடுத்து வருவதில் பல முட்டுக் கட்டைகளைப் போட்டு காலதாமதப் படுத்தும், அரசு தரைவழிப் பாதையை முற்றாக தடை செய்திருப்பதன் மூலம் தமிழ் மக்களைப் பட்டினி போட்டுள்ளதாகக் கூட்டுறவாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## ஆணைக் குழுவின் செயலாளர்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. எஸ். ஜறேனிஸ் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்குகிழக்குமாகாணசபையின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராகவும் திரு. எஸ். ஜறேனிஸ் பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளைக் குழுவினருக்கு பயிற்சி

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி பலநோ. கூ. சங்க கிளைக் குழுவினருக்குப் பயிற்சி வகுப்பு ஒன்று இம்மாதம் 26-ம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. சி. சுபபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறியில் திரு. வீ. கே. சிவராசசுந்தரம் - கல்விப் பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர், மாவட்டசெயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் பயிற்சி அளிக்கவுள்ளனர்.

## புதிய நெறியாளர்

தெல்லிப்பழை பல நோ. கூ. சங்க புதிய நெறியாளர் விபரம் வருமாறு,

திரு. நா. பத்மநாதன், (தலைவர்) திரு. சி. நடராசா (உபதலைவர்) திரு. கா. சரவணமுத்து, திரு. சு. சிவராசா, திரு. பொ. தங்கராசா, திரு. ச. தனபாலசிங்கம், திரு. சி. கதிரவேலன்.

## கல்வித் திட்டம் தயாரிப்பு

கிளிநொச்சி மாவட்டகூட்டுறவுச் சபையினர் மாவட்ட கூட்டுறவுச் சபையின் கல்வித் திட்டமொன்றினைத் தயாரித்து வடகிழக்கு மகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

இக்கல்வித்திட்டத்தில் மாணவர்களுக்கான கூட்டுறவுக் கல்வித்திட்டம், உறுப்புரிமைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான கல்வி, தலைவர்கள் முகாமையாளர்களுக்கான முகாமைத்துவக் கல்வித் திட்டம் ஆகியன அடங்கியுள்ளன.

## பதவி

★ சேவையாளனை தேடி பதவி தானாக செல்லும்.

★ பதவியைத்தேடி செல்பவன் சேவையாளனாக மாட்டான்.

★ பதவியால் சிறப்படைபவனாக இல்லாமல் பதவி அவனால் சிறப்படைய வேண்டும்.

★ பதவியை தன் சொந்த நலனுக்காக பாவிப்பவன் முதல்தர சமூக விரோதியாவான்.

★ ஒரு பதவியை வகிப்பவன் அப்பதவியை சரியாக புரிந்தவனாக இருக்க வேண்டும்.

★ ஒரு பதவியை வகிப்பவனால் வெளியிடப்படும் கருத்தின்மூலமே அப்பதவியின் சிறப்பும், தாழ்வும் தங்கியுள்ளது.

நாரையூரான்



வடமராட்சிப்பகுதி கூட்டுறவு நிறுவனங்களின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலில் வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா உரையாற்றுகிறார். இடதுபுறத்தில் பிரதேச செயலர் திரு. கே. கனகரத்தினம் வலதுபுறத்தில் வடமராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்க தலைவா சி. பொன்னம்பலம் ஆகியோரும் படத்தில் காணப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● உரத்தடை ● பொருளாதாரத்தடை ● திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்து

# யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியம் மகஜர்!

தற்போது தங்கள் அரசினல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து அசேதன பசளை மேலான தடையானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாய உற்பத்தியை முடக்கி வைக்கும். இப்பிரதேச மக்களின் உணவுத்தேவையின் பெரும்பகுதியை இழக்க நேரிடும். இது போரினால் பாதக்கப்பட்டுள்ள மக்களுக்கு பெரும் நெருக்கடியாக அமையும் என்பதுடன் இதன் காரணமாக 10 லட்சம் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவர் என்பதையும் சுட்டிக்காட்ட விருப்புகிறோம்.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறுகுறிப்பிடப் பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

1990ம் ஆண்டு ஆனிமாதம் ஐக்கியதேசியக் கட்சி அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினாலும், பொருளாதார தடையினாலும் விவசாய உள்ளீடுகள் வடபகுதிக்கு கொண்டுவருவது மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டு 95,000 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இவர்களது கஸ்டங்டங்கள் மிகக் கொடூரமானதாகும்.

ரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளின்படி "அமோனியம் சல்பேற்று" பசளையில் எதுவித இராணுவ வெடிபொருட்களும் தயாரிக்கமுடியாது என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளமை உங்கள் மேலான கவனத்திற்கு முன் வைக்கின்றோம். அசேதன பசளைகள் மீதான தடை ஒருநாட்டின் தன்னிறைவுக்கு பெரும் பின்னடைவாகும்.

19-4-95ல் மீண்டும் ஒரு பொருளாதார தடை வடபகுதி மக்கள்மீது விதிக்கப்பட்டது பெரும் அநீதியாகும். அப்பாவி மக்களுக்கு இது பெரும் அச்சுறுத்தலாகும். கோரயுத்தம், இடம்பெயர்வு, தொழிலின்மை, வருமானமின்மை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள்மீது அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடை ஒரு மனிதநேயமற்றசெயலாகும்இவ்வாறான அநாகரிகமற்ற செயலை எமது மக்கள் வெறுக்கிறார்கள். வடபகுதி பாரம்பரியமான விவசாய பிரதேசம் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

போக்குவரத்து தடை காரணமாக பிறமாவட்டங்களில் இருந்து தனியாரோ அல்லது பலநோ. கூ. சங்கங்களோ உணவுப்பொருட்களை கொண்டுவர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொருட்களின் விலை சந்தையில் பல்மடங்கு உயர்ந்துள்ளது. தொழிலற்று இருக்கும் எம்மக்களினுல் எவ்வாறுகூடிய விலைக்கு நுகர முடியும்.

எம்மக்களுக்கு எதிரான பொருளாதாரத் தடை, போக்குவரத்துதடை, சிறுகைத்தொழில்கள், சிறுசுயதொழில்வாய்ப்புக்கான மூலப்பொருளின்மை, தொழிற்சாலைகள், தொழில்நிறுவனங்கள் மீதான விமானக்குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள், கடல் வலய தடைச் சட்டத்தினால் கடற்றொழில் செய்ய இயலாமை என்பவற்றால் பாதிப்படைந்த மக்கள் எவ்வாறு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்?

எனவே, யாழ். மாவட்ட மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டிய பொறுப்பு தங்கள் அரசுக்கு உண்டு. ஆனால் யாழ். மாவட்டத்தில் அரச களஞ்சியங்களிலோ, கூட்டுறவு, தனியார் நிறுவனங்களிலோ உணவுப் பொருட்கள் கையிருப்பில் இல்லை. இதனால் எமது மக்கள் பட்டினிசாவை எதிர்நோக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்கள், பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். எனவே யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை கப்பல் மூலமாகவும் தரைமார்க்கமாகவும்கொண்டு வருவதற்குரிய தடைகளை நீக்க வேண்டும்.

யுத்தத்தின் மூலம் இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணமுடியாது என்பதை வரலாறு நமக்கு தெட்டத்தெளிவாக சுட்டி நிற்கிறது. இதையே நாமும் தங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம். இந்த நீண்டகாலபோரினாலே எம்மக்கள் பெரும் வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர். இதனால், தமது மண்ணில் சுதந்திரமாக வாழ விரும்பி ஒவ்வொரு தமிழனும் போராட்ட உணர்வுடன் சிந்திக்க முற்பட்டுவிட்டான். எனவே இந்நாட்டில் அமைதி, சமாதானம், சுகவாழ்வு கிடைக்க இனஅழிவிற்கான யுத்தத்தை உடன் நிறுத்துங்கள்.

## இன்புருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சேவைகள்

இன்புருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் கடற்றொழிலாளர் ஓய்வூதியத்திட்டத்திற்கு அங்கத்தவர்களுக்கு உதவிகள் வழங்கி வருவதுடன், பிரதேச செயலர் பிரிவு மூலமாக சத்துணவுத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாதம் 500 ரூபாவை வழங்கி வருகிறது.

இன்புருட்டி சி. க. கூ. சங்கத்தினால் நடாத்தப்படும பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் கிழமையில் ஒரு நாளைக்கான சத்துணவையும் சங்கம் வழங்கி வருகிறது.

சுமார் 345 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சங்கம் அங்கத்தவர்களிடம் இருந்து பெறப்படும் சேமிப்பில் இருந்து அவர்களுக்கு கடன்களை வழங்கி வருவதுடன், இளைஞர்களை ஊக்குவித்து அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## கேள்வி ? பதில் !

கேள்வி : ஒரு கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 3 நாட்களுக்கு மேல் எதுவித அறிவித்தலுமின்றி கடமைக்கு சமூகம் அளிக்காது இருந்தால் அவருடைய நிலைப்பாடு என்ன ?

— நளாயினி, நல்லூர்.

பதில் — கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதி இல. 34-ன் பிரகாரம் (பதவியை வெறிதாக்கல்) லீவு அனுமதிக்கப் பெறாமல் அல்லது தகுந்த காரணங்களின்றி மூன்று தொடர்ச்சியான நாட்களுக்கு கடமைக்கு வரத் தவறும் பணியாளர் ஒருவர் அவர் வராதிருந்த திகதியிலிருந்து தனது பதவியை வெறிதாக்கியுள்ளார். எனக்கருதப்படல் வேண்டும. அந்த முடிவு அவருக்கு பதிவுத்தபால் மூலமோ, நேரடித் தகவல் ஒப்படைப்பு மூலமோ அறிவிக்கப்படல் வேண்டும். லீவு அனுமதிக்கப்பெறாமல் வராது நின்றதன் பொருட்டு அவருக்கெதிராக குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படலாகாது. அல்லது விளக்கம் அளிக்குமாறு அவரை கோருவதற்கு அவசியமும் இல்லை. ஆனால் அவராகவே வராது நின்ற திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் விளக்கம்கொடுக்க முன்வந்தால் சங்கம் அதைக் கவனிக்காமல் அது பரிசீலிக்கப்பட்டபின்னர் அவர் வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு அனுமதிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

கேள்வி : பலநோ. கூ. சங்கத்தின் தலைவர், உபதலைவர் ஆகியோரது அதிகாரங்களும், கடமைகளும் என்ன?

— செந்தூரன், கரவெட்டி.

பதில் — பலநோ. கூ. சங்கமாதிரி உபவிதி 66ன் பிரகாரம்,

(1) தலைவர் நெறியாளர் குழுவின் கூட்டத் தலைவராக இருப்பார். அவர் சமூகமளித்திருப்பின் பொதுச்சபைக் கூட்டங்களுக்கும், நெறியாளர் குழுக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவார். பொது முகாமையாளரினதும் சங்கத்தின் ஏனைய பணியாளரினதும் வேலையை மேற்பார்வை செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இருக்கும். இவ்வுபவிதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதையும் பொதுச் சபையினதும், நெறியாளர் குழுவினதும் தீர்மானங்கள் செம்மையாகச் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதையும் அவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) உபதலைவர் நெறியாளர் குழுவின் உப கூட்டத் தலைவராகவும் இருப்பார். தலைவர் சமூகமளிக்காத விடத்து பொதுச்சபைக் கூட்டங்களுக்கும் நெறியாளர் குழுக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவதற்கு உபதலைவருக்கு அதிகாரம் இருக்கும். இலங்கையில் இல்லாத காரணத்தினாலோ அல்லது சுகயீனத்தினாலோ தனது செய்கடமைகளை நிறைவேற்றத் தலைவர் ஆற்றலற்றவர் என நெறியாளர் குழு கருதுங்கால் உபதலைவர் தலைவருக்குப் பதிலாகக் கடமையாற்லாம்.

கேள்வி : மாணவ மதிய உணவு முத்திரைக்கு ஒவ்வொரு பல நோ. கூ. சங்கங்களிலும் ஒரே விதமான பொருட்கள் வழங்கப்படும்போது விலை வித்தியாசமாக இருக்கிறது இது ஏன் ? உ-ம் மை. பருப்பு 40/-, 31/ , நாட்டரிசி 29/50, 29/-

— என். கே. பிள்ளை, வேலணை.

பதில் — பல. நோ. கூ. சங்கங்களினால் வழங்கப்படும் மாணவ மதிய உணவு முத்திரைக்குரிய பொருட்களை சங்கங்கள் வெளியில் கொள்வனவு செய்வதினால் இவ்விலை வித்தியாசம் ஏற்படுகிறது.

குறிப்பு :- மேற்படி விலை வித்தியாசம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட சங்கங்கள் எதிர்காலத்தில் கவனத்தில் கொள்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

கல்வி உத்தியோகத்தர் பதவியை —

## முகாமைத் தரத்திற்கு உயர்த்த கோரிக்கை!

"சங்கத்தின் சகல மட்டப் பணியாளர்களுக்கும் கல்வி பயிற்சியளிப்பு வேலைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு வாய்ந்த பதவியாக" கல்வி உத்தியோகத்தர் பதவி இருப்பதால், தற்போது மேற்பார்வை மட்டத்தில் உள்ள இப்பதவியை 'முகாமை மட்டப்பதவி' யாகத்தரம் உயர்த்தப்படல் வேண்டியது அவசியமாகும்." இவ்வாறு கோரும் மகஜர் ஒன்று யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களினால் வடகிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

கூட்டுறவுச் சங்கங்களின் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு அங்கத்துவ தொடர்புகளையும், விரிவாக்க நடவடிக்கைகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் நோககுடன் உருவாக்கப்பட்ட இப் பதவியை சங்கங்களில் நிரந்தரமாக்கப்பட்டு முழுமையாக இப் பதவிக்குரிய கடமையை செய்வதற்கும்;

இப் பதவிக்குரிய கடமைகளைச் செயவதற்கு சங்கங்கள் பூரண ஒத்துழைப்பையும், செலவீனங்களை வழங்கவும், ஆவன செய்யப்பட வேண்டும்.

## கிராமியவங்கிகள் இடமாற்றம்

கடந்த மாதம் 9-ம் திகதியும் அதற்குப் பின்பும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, சுன்னாகம் ஆகிய பல நோ கூ சங்கங்களின் கிராமிய வங்கிகள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சங்கனையில் இயங்கி வந்த பண்டத்தரிப்பு ப நோ கூ சங்க கிராமிய வங்கி மானிப்பாய் வீதியிலும் (மானிப்பாய் வைத்தியசாலைக்கு அருகாமையில்) மானிப்பாயில் இயங்கி வந்த தெல்லிபபழை பல நோ கூ. சங்க கிராமிய வங்கி காங்கேசன் துறைவீதி இணுவிலிலும். சுன்னாகம் பல நோ. கூ சங்க கிராமிய வங்கி இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையிலும் தற்போது இயங்கி வருகின்றன.

## திருட்டு

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தின் சுன்னாகம கிழக்கு 28 A விற்பனை நிலையம அண்மையல் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட பொருட்களின் பெறுமதி 12782/50 சதம் என தெரிவிககப்பட்டுள்ளது.

## கட்டிடம் சேதம

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது நடாத்தப்பட்ட விமானகுண்டு வீச்சு தாககுதலினால் சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் உடுவில் மேற்கு களஞ்சியக் கட்டிடம் பலத்த சேதத்திற்குள்ளானது.

களஞ்சியக் கட்டடத்தின் சேதம் சுமார் ஒருலட்ச ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளதாக சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## பயிற்சிக் கருத்தரங்கு

தென்மராட்சியைச் சேர்ந்த பச்சிலைப்பள்ளி கொடிகாமம் சாவகச்சேரி, கைதடி பல. நோ. கூ. சங்கங்களின் கணக்காளர்கள், காரியாலய லிகிதர்கள் ஆகியோருக்கான ஒரு நாள் பயிற்சிக்கருத்தரங்கு அண்மையில் தென்மராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்க உபதலைவர் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் யாழ் மா. கூ. சபை கல்வி பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர் திரு. வீ, கே. சிவராஜசுந்தரம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிறிலங்கா அரசின் கொடுமைகளைக் கண்டித்தும், எதிர்த்தும் யாழ். நகரில் நடாத்தப்பட்ட மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி.

# யாழ். நகரில் கண்டன எழுச்சிப் பேரணி

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இன அழிப்பு, பொருளாதாரத்தடை, விவசாய உள்ளீட்டுப் பொருட்களுக்கான தடைகளைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இம் மாதம் 9-ம் திகதி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வார்ப்பாட்ட பேரணி யாழ். நாச்சிமார் கோவிலில் இருந்து காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகி, காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்ட வீதியூடாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை சென்றடைந்து அங்கு கண்டன மகஜரின் பிரதி கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேரணி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதியூடாக செயலக முன்றலை நண்பகல் 12-30 மணிக்கு சென்றடைந்தது.

செயலக முன்றலில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவா திரு. சொலமன் சூ. சிறில் தலைமையில் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினி அம்மா திலகநாயகம்போல் அவர்களிடம் கண்டன மகஜர் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

பேரணியில் அரசின் செயல்களைக் கண்டிக்கும் சுலோகங்களுடன் ஆயிரக்கணக்கான கூட்டுறவாளர்கள், விவசாயிகள், மற்றும், அரச, தனியார், வணிக நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு யாழ். மாவட்ட விவசாய சமாசத்தினர் செயலக முன்றலில் வைத்து தாகசாந்தி அளித்தனர்.

# இப்படியும் நடக்கிறது !

பல நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கென அண்மையில் மாகோ கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட சவர்க்காரத்தில் ஒருதொகுதி சவர்க்காரம் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்படாமல்(1000 பெட்டி) சவர்க்காரம் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்ட செய்தி அனைவருக்கும் தெரிந்தவொன்றே.

கொழும்புத்துறைமுகத்தில் சவர்க்காரப் பெட்டிகளை ஒப்படைத்த சங்கப்பிரதிநிதியிடம் கப்பல் கப்டன் திருப்பிக்கொடுக்கும்போது 100 பெட்டி சவர்க்காரம் குறையக்காணப்பட்டதாம்.

ஆனால் திருப்பி அனுப்பப்பட்ட சவர்க்காரத்திற்கு என்ன நடந்தது தெரியுமா ? அதில் 100 பெட்டி சவர்க்காரம் கப்பலில் இருந்து மாயமாக மறைந்து விட்டது.

அப்போது சங்கப் பிரதிநிதி 100 பெட்டி சவர்க்காரம் குறைகிறதே என்று கேட்டபோது கப்பல் கப்டன் அளித்த பதில் என்ன தெரியுமா ?

தெரியாது... என்றாராம். எப்படியிருக்கிறது சமாச்சாரம் ?

இத்தனைக்கும் சவர்க்காரத்தின் பெறுமதி, கப்பல் ஏற்றிய இறக்கிய கூலி, கப்பல் கட்டணம் எல்லாமாகச்சேர்த்து சுமார் ஒரு லட்ச ரூபாவுக்குமேல் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு நட்டமாம்.

# இராணுவத்தினால் 200ஹெக். பயிர் நாசம்!

கடந்த யூலை மாதம் 9-ம் திகதி இடம்பெற்ற முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையினால் சுமார் 200 ஹெக்டர் விளைநிலம் செய்பயிர்களுடன் இராணுவத்தினால் நாசம் செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 46 ஹெக்டர்களும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில 74 ஹெக்டர்களும், உடுவில்உதவி அரசஅதிபர் பிரிவில் 23 ஹெக்டர்களும், சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில்57 ஹெக்டர்களும பயிர்களுடன் நாசம் செய்யப்பட்டுள்ளன.

மிளகாய், வெண்காயம், குரக்கன், நிலக்கடலை, மரவள்ளி, பயறு, கத்தரி, தக்காளி, வெண்டி, பூசணி, பீர்க்கு, வாழை, வெள்ளரி, புடோல், பாவல் பயிர்களே நாசம செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிர் அழிவுகள் சம்மந்தமாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

# சரக்கு இனபயிர் அறிமுகம்

யாழ். மாவட்ட விவசாய சமாசம் மல்லி, பெருஞ்சீரகம், வெந்தயம் போனறவற்றை பரீட்சார்த்தமாக செய்கை பண்ணும் திட்டத்தின்கீழ் தனது அங்கத்துவ சங்கங்களிடம் அங்கத்துவ விவசாயிகளைத் தெரிவுசெய்துதருமாறு கேட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்படும விவசாயிகளுக்கு 200 கிறாம் நல்லின விதைகளும, அதற்குரிய உரமும் இலவசமாக வழங்கப்படவிருப்பதாக சமாசத் தலைவா திரு, எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

## முடிவுத் திகதி நீடிப்பு

யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவுக்குக் கோரப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதி 30 - 08 - 95 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## துரித ... ... ...

பருத்தித்துறை, கரவெட்டி பிராந்திய சங்கங்களுடனும் கலந்துரையாடப்பட்டு கணக்காய்வு வேலைகளுக்கான சுற்று நிருபம் வழங்கப்படவுள்ளதாகவும், வலிகாமம் பகுதியில் சமூகமளிக்காத சங்கங்களுக்கும் கணக்காய்வு உத்தியோகத்தர்களை புதிதாக ஒதுக்குவதற்கு தமிழீழ நிர்வாக சேவையினரின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளதாகவும், வடமராட்சி பிராந்திய சங்கங்களுக்கு உத்தியோகத்தர்களை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கென தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவுப் பயிற்சியும், அனுபவமுடைய சிரேஷ்ட சங்கப் பணியாளர்களுக்கு கணக்காய்வு வேலைகள் சம்மந்தமாக விசேட பயிற்சிகள் மாவட்ட கூட்டுறவுச் சபையி [illegible]

கூட்டுறவு ... ... ...

யிட்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். இதன்மூலம் இம் மாவட்ட கூட்டுறவாளர்களின் ஆசை நிறைவேற்றப்படுவதுடன், கூட்டுறவுத் துறையின் வினைத்திறனும் அதிகரிக்கப்படும்என எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

1995 - ம் ஆண்டின் 2-வது தடவையாக நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கு சுமார் 40 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வைபவத்தில் மாவட்ட கூட்டுறவுக் கல்விக் குழுவின் தலைவர் திரு. பொன. சபாபதி உட்பட மாணவர்களும, கூட்டுறவாளர்களும் கலந்துகொண்டனர்.

# இழப்பு

முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையின்போது தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கத்தின் விற்பனை நிலையங்களில் இருந்து பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான நிவாரண நுகர்ச்சிப் பொருட்களை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இழந்துள்ள பொருட்களின் பெறுமதி 437668 / 26 சதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளம்பர அன்பளிப்பு

★ நல்லூர் பல நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி

★ காரைநகர் பல நோ. கூ. சங்கம்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

★ தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கைதடி

★ கொடிகாமம் பனை, தெ. வ. அபி. கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்

★ வடமாகாண பனை, தென்னை வ. அ. கூட்டுறவுச் சங்க சமாசம்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

## கேள்வி பதில் ... ... ...

கேள்வி : கூட்டுறவு வேலையாளர்களது வேலை நேரம் விடுமுறைகள் லீவு பிறநலன்கள் பற்றி கூறுவீர்களா ?

எஸ். விக்கினேஸ்வரி, கோப்பாய்.

பதில் — கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதி 67ன் பிரகாரம், வேலை நேரம், வாராந்த விடுமுறைகள், வருடாந்த விடுமுறைகள், லீவு, அரசாங்க விடுமுறைகள், பிரசவ நலன்கள் என்பன தொடர்பாக கடைகள் அலுவலகப் பணியாளர் சட்டம், சம்பள நியதிச் சபைக்கட்டளைச் சட்டம், பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம் அல்லது பொருத்தமான சம்பள நியதிச்சபைத் தீர்மானம் என்பன ஏற்புடையனவாம். மேற்குறித்த வகுதிகளுக்குக்கீழ்வராத பணியாளர் தொடர்பாக சேவை ஆணைக்குழு நிபந்தனைகளைத் தீர்மானிக்கும்.

யா, மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org